

மதுரை மாவட்டம் , கிழக்கு சட்டமன்ற தொகுதி கிழக்கு (வடக்கு) ஒன்றியத்துக்கு உட்பட்ட யா.புதுப்பட்டி, காதக்கிணறு மற்றும் வெள்ளியங்குன்றம் ஊராட்சியில் உள்ள பொதுமக்கள் பயன்பெறும் வகையில் காதக்கிணறு ஆர்.சி நடுநிலைப் பள்ளியில் நடைபெற்ற 'உங்களுடன் ஸ்டாலின்' திட்ட முகாமினை வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி தொடங்கி வைத்து ,துறை சார்ந்த அரங்குகளில் மனுக்கள் பதிவு செய்யப்பட்டு வருவதை பார்வையிட்டார். உடன் சோழவந்தான் சட்டமன்ற உறுப்பினர் ஆ.வெங்கடேசன், முன்னாள் ஒன்றிய சேர்மன் மணிமேகலை ராஜேந்திரன், ஒன்றிய செயலாளர் மதிவாணன் மற்றும் அரசு அதிகாரிகள் கழக நிர்வாகிகள், கழகத்தினர், திரளான பொதுமக்கள் பங்கேற்றனர்.

# கரூரில் 41 பேர் உயிரிழந்த துயரச் சம்பவம்!

## அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர் பேட்டி!



அரியலூர், அக்,2-

கரூரில் கடந்த 27ஆம் தேதி த.வெ.க. தலைவர் விஜய் மக்கள் சந்திப்பு பயணம் பிரச்சார கூட்டம் நெரிசலில் சிக்கி நூற்றுக்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர். இதில் 41 பேர் உயிரிழந்த நிலையில் மாற்றுக் கட்சியினர் இறந்திருந்தாலும், தமிழ்நாடு முதலமைச்சர், மு.க. ஸ்டாலின் அவர்கள் தமிழ்நாட்டின் முதலமைச்சர் என்ற, அந்த பொறுப்புணர்வோடு, அவரே, அவருடைய காணொளியில் சொன்னது போல, தமிழ் உறவுகள் என்ற அடிப்படையில், இரவே வந்து, அவர்களை பார்த்து, ஆறுதல் சொல்லி,இறந்தவர்களின் உடலுக்கு மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தி அவர்களுக்கான நிவாரணத்தையும் வழங்கினார். ஆனால், அந்த ரசிகர்களை யார் கூட்டினாரோ, யார் அவர்களுக்கு, தன்னை தலைவர் என்று சொல்லிக்கொண்டு, அந்த கூட்டத்தில் பேசினாரோ, அந்த இறப்புக்கெல்லாம் யார் காரணமோ, அவர் தெறித்து ஓடிவிட்டார், சென்னைக்கு.

ஆனால், இன்றைக்கு ஒரு வீடியோ வெளியிடுகிறார், அனுதாபம் தேடுகின்ற வகையில். ஆனால் தமிழ்நாடு முதலமைச்சர், துணை முதலமைச்சர், அமைச்சர்கள் அந்த சம்பவம் நடந்தவுடன், அங்கிருந்து, திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொறுப்பாளர்கள், இன்னும் சொல்லப் போனால், அதிமுகவின் பொறுப்பாளர்கள் கூட, அங்கே வந்திருந்து, அவர்களுக்கான உதவியை செய்தார்கள். அதே போல, முதலமைச்சர் அவர்களோடு, அமைச்சர்களும், அங்கே இருந்து, அந்த களத்திலே பணியாற்றுகின்ற, காட்சியை, நானே பார்த்திருக்கிறது. ஆனால், இந்த நிமிடம் வரை, எந்த கட்சி, அந்த கூட்டத்தை நடத்தியதோ, அந்த கட்சி நிர்வாகிகள் யாரும், அந்த மருத்துவமனைக்கும் செல்ல வில்லை. யாரையும் பார்த்து, ஆறுதல் சொல்லவில்லை. யாருக்கும் உதவி செய்யவில்லை.

இப்படிப்பட்ட ஒரு, அவலமான சூழ்நிலையை ஏற்படுத்தி இருக்கிறார்கள். ஏற்படுத்திவிட்டு, அதை வைத்து, தமிழ்நாட்டு அரசியலில், ஒரு கலவரத்தை, உண்டாக்குவதற்கான, திட்டத்திலே இறங்கி இருக்கிறார்கள். அந்த கட்சியினுடைய ஒரு முக்கிய நிர்வாகியாக, அறிவிக்கப்பட்டிருக்கின்ற, ஆதவ் அர்ஜுனா என்ற நபர், அந்த கட்சியை நடத்துவதற்கு, அவர்தான் பணம் கொடுப்பதாக கூட, தகவல் இருக்கிறது. அவர் ஒரு, tweetஐ இரவு வெளியிடுகிறார். அதில் லடாக்கில் நடந்தது போல, நேபாளத்தில் நடந்தது போல, புரட்சி வெடிக்க வேண்டும் என்று சொல்கிறார்.

நேபாளத்திலும், லடாக்கிலும், அங்கே இருக்கின்ற பிரச்சனை என்ன? அதற்கான சூழல் என்ன? என்பதை, மக்கள் அரிவார்கள் தமிழ்நாட்டில், இவர்கள் கட்சி செய்த தவறுக்காக, அதை மறைப்பதற்கு, அதை காரணமாக வைத்து, ஒரு கலவரத்தை, ஏற்படுத்த வேண்டும் என்று, நினைக்கிறார் என்றால், அவர், இந்த தேசத்தினுடைய, பாதுகாப்பிற்கும், நாட்டின் பாதுகாப்பிற்கும், மாநிலத்தின் பாதுகாப்பிற்கும், குந்தகம் விளைவிக்கின்ற, நடவடிக்கையில்தான், இறங்கினார்.

எனவே, இந்த நபருடைய, இந்த செயலானது, தேசவிரோத செயல். இதை கண்டிக்க வேண்டிய ஒன்றிய அரசோ, அல்லது ஒன்றிய அரசு நிர்வாகிகளோ, அதில் கவனம் செலுத்தாமல் இருக்கிறார்கள் என்றால், அதற்கு பின்னணியில் அவர்கள்தான் இருந்து, இயக்குகிறார்களோ? என்கின்ற சந்தேகம் எழுகிறது.

எனவே, ஒரு தலைவன் என்பவன், தன்னை நம்பி வந்தவர்களுக்காக, முதலில் களத்தில் நிற்க வேண்டும். திராவிட முன்னேற்ற கழகத்திற்கு எந்த நேரத்தில் எல்லாம், சோதனையை சந்தித்ததோ, அந்த சோதனைகளின் போதெல்லாம், தொண்டர்களோடும், மக்களோடும் நின்றவர், முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள். அதேபோல்தான், இன்றைக்கு முதல்வராக இருக்கின்ற, தளபதி அவர்களும், சென்னை வெள்ளம் மட்டுமல்ல, தமிழ்நாட்டிலே, எங்கு வெள்ளம் ஏற்பட்டாலும், பாதிப்பு ஏற்பட்டாலும், அங்கே போய், களத்தில், முதலில் நபராக மக்களின் காவலராக நிற்பவர், அவராகத்தான் இருப்பார், இருந்தார்,

கொரோனா உச்சத்தில் இருந்தபோது, யாரும், அந்த கொரோனா நோயாளிகளை, சந்திக்க, துணியாத போது, அவர்தான், முதலில் மருத்துவமனைக்கு சென்று அவர்களை சந்தித்து, ஆறுதல் சொல்லியவர், நான் இருக்கிறேன் கவலைப்படாதீர்கள் உங்களுக்கு எதுவும் ஆகாது நான் பார்த்துக் கொள்கிறேன் என ஆறுதலும், நம்பிக்கையும் அந்த மக்களுக்கு தந்தவர் நம் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள்.

எனவே, இப்பொழுதும், அதேமனிதாபிமான அடிப்படையில், அதே, கடமை உணர்வோடு, அவர், மக்களை சந்திக்க வந்தார். அவர், இதே போல் எப்போதும் களத்தில் இருப்பார். எனவே, அவர் பின்னால், தமிழகம் திரளும். இந்த ஏமாற்ற அரசியல்வாதிகள், நிச்சயமாக, மக்கள் முன், அம்பலப்பட்டு நிற்பார்கள். தன்னுடைய பாதுகாப்புக்கு விஜய் இப்பொழுது, அங்கே போய் நிற்கிறார். எந்த பாஜகவை எதிர்ப்பேன், எந்த பாஜகவினர், பாசிசத்தை எதிர்ப்பேன் என்று சொன்னாரோ, அவரிடத்திலே, அவர் மண்டியிட்டு நிற்கின்ற, ஒரு நிலைமைதான், இன்றைக்கு வந்திருக்கிறது.

எனவே, நாங்கள் ஏற்கனவே சொல்லி வந்தோம். பாஜகவுடைய கைக்கூலிகள்தான் விஜய் என்று இன்றைக்கு தமிழ்நாட்டு அரசியலிலே, பலரும் களம் இறக்கப்பட்டு இருக்கிறார்கள். அது வெளி தெரிய வருகின்ற காலம் வந்துவிட்டது .தனி நபர் ஆணையம் விசாரணை நடைபெற்று வருகிறது கூடிய விரைவில் அறிக்கை வந்து விடும் தவறு செய்தவர்கள் நிச்சயமாக 41 பேர் இறந்ததற்கு பதில் சொல்லியே ஆகவேண்டும், தண்டனை நிச்சம் உண்டு என செய்தியாளர்களிடம் அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர் தெரிவித்தார்.

### தொழில் முனைவோருக்கான

# விற்பனையாளர் மேம்பாட்டுத் திட்டம் - தொழில் வளர்ச்சி பயிற்சி முகாம்!

## தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி — மேம்பாட்டுக் கழகம் நடத்தியது!

சென்னை, அக்.2-

தமிழ்நாடு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் கீழ் இயங்கும் தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டுவசதி மற்றும் மேம்பாட்டுக்கழகம் (TAHDCO), செப்டம்பர் 29 மற்றும் 30, 2025 அன்று தாம்பரத்தில் உள்ள சென்னை கிறிஸ்தவக் கல்லூரி (MCC) - MRF Innovation Park வளாகத்தில் முதல் SC/ST தொழில்முனைவோருக்கான விற்பனையாளர் மேம்பாட்டுத் திட்டம் (Vendor Development Programme) மற்றும் தொழில் வளர்ச்சி பயிற்சி முகாமை (Business Facilitation Workshop) நடத்தியது.

இரண்டு நாட்கள் நடைபெற்ற இந்த நிகழ்ச்சி, துறையின் மூத்த அலுவலர்கள், பொதுத்துறை நிறுவனங்கள் மற்றும் தொழில் முனைவோரின் முன்னிலை யில் தொடங்கப்பட்டது. TAHDCO மேலாண்மை இயக்குநர் கே.எஸ். கந்தசாமி, வரவேற்புரை நிகழ்த்தினார். ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் செயலாளர் திருமதி ஜி. லட்சுமி பிரியா, தலைமையுரை ஆற்றி, அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சியை கருத்தில் கொண்டு, கொள்முதல்கள் மேற்கொள்வதில் அரசின் உறுதிப்பாட்டை நிலை நாட்டினார்.

பின்னர் TAHDCO தலைவர் என். இளையராஜா சிறப்புரை ஆற்றினார்.

முதல் நாள் நிகழ்ச்சி SC/ST தொழில்முனைவோருக்கும் மத்திய மற்றும் மாநில பொதுத்துறை நிறுவனங்களுக்கும் (PSU) இடையே வலுவான தொடர்புகளை உருவாக்குவதை முதன்மையாகக் கொண்டது. ஆர்மர்டு வெஹிக்கிள்ஸ் நிகாம் லிமிடெட் (AVNL), சென்னை பெட்ரோலியம் கார்ப்பரேஷன் லிமிடெட் (CPCL), ஆண்ட்ருயூல் மற்றும் கம்பெனி, மற்றும் TANGEDCO ஆகிய நிறுவனங்கள் தங்களின் கொள்முதல் நடைமுறைகள், விற்பனையாளர் பதிவு மற்றும் விநியோகச் சங்கிலி வாய்ப்புகள் குறித்து விளக்கின. கேள்வி-பதில் (Q&A) அமர்வில், தொழில்முனைவோர் தங்கள் சந்தேகங்களை கேட்டு தெளிவுபடுத்திக்கொண்டனர்.

மேலும், NSIC நிறுவ னத்தின் முன்னாள் CMD P. உதயகுமார், "கொள்முதல் இலக்குகளை அடைவதில் பொதுத்துறை நிறுவனங்களுக்கு உள்ள சவால்கள் மற்றும் அவற்றைக்கடக்க வேண்டிய உத்திகள்" என்ற தலைப்பில் சிறப்பு அமர்வை நடத்தினார். இதில் SC/ST தொழில்முனைவோரை தேசிய பொது கொள்முதல் கொள்கையுடன் இணைப்பதன் அவசியத்தை வலியுறுத்தினார். அதோடு, "வரி ஒழுங்குமுறைகள் (Tax Compliances)" குறித்த ஒரு அமர்வும் இடம்பெற்றது.

இரண்டாம் நாள், தொழில்முனைவோரின் திறன்களை மேம்படுத்த தொழில் வளர்ச்சி பயிற்சி முகாம்நடைபெற்றது. பங்கேற்பாளர்களுக்கு பிராண்டிங், பேக்கேஜிங், நிதி மேலாண்மை மற்றும் GeM குறித்த மாஸ்டர் கிளாஸ் (Masterclass) நடத்தப்பட்டது.

ஒரு தனித்துவமான பிராண்ட் அடையாளத்தின் அவசியம், சந்தைப்படுத்துதல், பிராண்டிங்கிற்கான அடிப்படை வழிகாட்டுதல்கள் மற்றும் பிராண்டை நிலைநிறுத்தி வளர்ப்பதற்கான திறன்கள் குறித்து தொழில்முனைவோருக்கு அறிவுரை வழங்கப்பட்டது.

மேலும் தொழில் முனைவோர் அவசியமாக அறிந்து கொள்ளவேண்டிய நிதி மேலாண்மை தகவல்கள், GST, வருமானவரி, பதிவுகள் போன்றவை குறித்த தெளிவான வழிகாட்டுதல்கள் வழங்கப்பட்டது.

இரண்டு நாட்களிலும் அரசு இசந்தை (GeM) குறித்த அமர்வும் நடத்தப்பட்டது. இதில் பங்கேற்பாளர்களுக்கு GeM தளத்தில் பதிவு செய்வது, பொருள் பட்டியலிடுதல் (cataloguing), பொருள் வகைப்படுத்தல் போன்ற வழிகாட்டுதல்கள் வழங்கப்பட்டன. இது, அரசு இசந்தையில்(GeM) தங்களின் வணிக முன்னிலையை வலுப்படுத்த ஒரு வாய்ப்பாகஅமைந்தது.

இந்த இரண்டு நாள் நிகழ்வின்மூலம், SC/ST தொழில் முனைவோருக்கு சந்தைவாய்ப்புகளை ஏற்படுத்தித் தருவதிலும் திறன் மேம்பாட்டிலும் TAHDCO தனது பங்கினை மீண்டும் உறுதிப்படுத்தியுள்ளது. இதனை தொடர்ந்து, கோயம்புத்தூர், திருச்சிராப் பள்ளி, வேலூர், மற்றும் திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களில் SC/ST தொழில் முனை வோருக்கான விற்பனையாளர் மேம்பாட்டுத் திட்டம் (Vendor Development Programme) மற்றும் தொழில் வளர்ச்சி பயிற்சி முகாம்கள்(Business Facilitation Workshop) நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.



கழகத் தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆணைக்கிணங்க கழக இளைஞரணி செயலாளர், துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் ஆலோசனையின் படி முத்தமிழ் அறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் 102வது பிறந்த தினத்தை முன்னிட்டு திருமங்கலம் சட்டமன்றத் தொகுதியைச் சேர்ந்த 1.50 லட்சம் குடும்ப அட்டைதாரர்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கி வரும் நிகழ்வின் ஒரு பகுதியாக கள்ளிக்குடி ஒன்றியத்துக்கு உட்பட்ட பகுதிகளில் கிராமம் கிராமமாகச் சென்று நலத்திட்ட உதவிகளை மாவட்டச் செயலாளர் சேடபட்டி மு.மணிமாறன் வழங்கி அன்னதானமும் வழங்கினார். இந்நிகழ்வில் ஒன்றிய செயலாளர் மதன்குமார், கழக நிர்வாகிகள் செல்லம்பட்டி முத்துராமன், டிஸ்கோ அலாவுதீன், நாகராஜன், பாண்டியன், சண்முகம், ஆதவன் அதியமான், காளீஸ்வரன், ரம்யா முத்துக்குமார், செல்வேந்திரன் மற்றும் கழக நிர்வாகிகள், கழகத்தினர் திரளான பொதுமக்கள் பங்கேற்றனர்

### கழக இளைஞர் அணி அறக்கட்டளை சார்பில்

# அமைச்சர் சு.முத்துசாமி தலைமையில் மொடக்குறிச்சி அன்பகம் அமைக்கும் பணி!

## கழக இளைஞர் அணி துணை செயலாளர் கே.இ.பிரகாஷ் எம்.பி. அறிக்கை!



ஈரோடு, அக்.2–

கழகத் தலைவர், திராவிட மாடல் நாயகர், தமிழ்நாடு முதலமைச்சர், தளபதி அவர்களின் நல்வாழ்த்துக்களுடன், கழக இளைஞர் அணி செயலாளர், இளம் தலைவர், தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதல் படி ஈரோடு மாவட்டம் மொடக்குறிச்சி சட்டமன்றத் தொகுதியில் கழக இளைஞர் அணி அறக்கட்டளை சார்பில் இன்று (02.10.2025 வியாழக்கிழமை)காலை 10:30 to 11. 00 மணி அளவில் ஈரோடு வெள்ளகோவில் மெயின் ரோடு, யூனியன் ஆபீஸ் அருகில் கழக இளைஞர் அணி துணை செயலாளர், ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் கே.இ.பிரகாஷ் ஆகிய எனது ஏற்பாட்டில் ஈரோடு தெற்கு மாவட்ட கழக செயலாளர், வீட்டு வசதி துறை அமைச்சர் சு.முத்துசாமி தலைமையில், கழக துணைப் பொதுச் செயலாளர், மாநிலங்களவை உறுப்பினர் அந்தியூர் ப.செல்வராஜ், கழக கொள்கைப் பரப்பு இணைச் செயலாளர், ஈரோடு கிழக்கு சட்டமன்ற உறுப்பினர் வி.சி.சந்திரகுமார், ஈரோடு மாநகராட்சி மேயர் நாகரத்தினம் சுப்பிரமணி, கழக இளைஞர் அணி துணைச் செயலாளர்கள் ஜோயல், இன்பா ரகு, அப்துல் மாலிக், இளையராஜா, சீனிவாசன், கஜேந்திர பிரபு, ஜி.பி.ராஜா, அனந்தகுமார், மொடக்குறிச்சி கிழக்கு ஒன்றிய கழகச் செயலாளர் வ.கதிர்வேல், மொடக்குறிச்சி பேரூர் கழக செயலாளர் பி.வி.சரவணன், மாநில, மாவட்ட நிர்வாகிகள், மாநகர, ஒன்றிய, பேரூர் பகுதி வார்டு கிளைக் கழக செயலாளர்கள், நிர்வாகிகள், இளைஞர் அணி மாவட்ட அமைப்பாளர் ஜே.திருவாசகம், மாநகர அமைப்பாளர் கே.டி.சுதாகர்

இளைஞர் அணி உள்ளிட்ட கழக சார்பு அணிகளின் மாவட்ட, மாநகர, ஒன்றிய, பேரூர், பகுதி, வார்டு, கிளைக் கழக அமைப்பாளர் முன்னிலையில் மொடக்குறிச்சியில் அன்பகம் கட்டிடம் கட்டும் பணி துவக்க விழா நடைபெற உள்ளது.

இந்நிகழ்ச்சியில் மாமன்ற உறுப்பினர்கள், நிலைக்குழு தலைவர்கள், பகுதி கழக, வட்ட கழக நிர்வாகிகள், அனைத்து சார்பு அணிகளின் அமைப்பாளர்கள், தலைவர்கள், துணை தலைவர்கள், துணை அமைப்பாளர்கள், கழக முன்னோடிகள், பாக முகவர்கள், பாக உறுப்பினர்கள் மற்றும் கழக உடன்பிறப்புகள் அனைவரும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு கழக இளைஞர் அணி துணை செயலாளர், ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் கே.இ.பிரகாஷ் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

### பழைய ஓய்வூதியத் திட்டம் — பங்களிப்பு ஓய்வூதியத் திட்டம் —

# ஒருங்கிணைந்த ஓய்வூதியத் திட்டம் - இடைக்கால அறிக்கை!

## அரசிடம் சமர்ப்பிக்கப்பட்டது!

சென்னை,அக்.2-

பழைய ஓய்வூதியத் திட்டம், பங்களிப்பு ஓய்வூதியத் திட்டம் மற்றும் ஒருங்கிணைந்த ஓய்வூதியத் திட்டம் குறித்து அரசின் சார்பில் அமைக்கப்பட்ட குழு தனது இடைக்கால அறிக்கையில் சமர்ப்பித்துள்ளது.

அதன் விவரம் வருமாறு:

பழைய ஓய்வூதியத் திட்டம், பங்களிப்பு ஓய்வூதியத் திட்டம் மற்றும் ஒருங்கிணைந்த ஓய்வூதியத் திட்டம் ஆகிய மூன்று ஓய்வூதியத் திட்டங்கள் குறித்து விரிவாக ஆராய்ந்து, மாநில அரசின் நிதி நிலையினை யும், பணியாளர்களின் ஓய்வூதியக் கோரிக்கைகளையும் கருத்தில் கொண்டு, நடைமுறைப்படுத்தத்தக்க ஓய்வூதிய முறை குறித்த பரிந்துரையினை ஒன்பது மாதங்களில் அரசிற்கு அளித்திட ககன்தீப் சிங் பேடி, அரசு கூடுதல் தலைமைச் செயலாளர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை அவர்களின் தலைமையில் மூன்று அதிகாரிகள் கொண்ட குழு கடந்த பிப்ரவரி 2025இல் அரசு அமைத்தது. பின்னர், உரிய அறிக்கையினை செப்டம்பர் 2025க்குள் அரசிற்கு அளித்திட இக்குழுவிற்கு தெரிவிக்கப்பட்டது.

அரசுப் பணியாளர்களின் பல்வேறு கோரிக்கைகளை முழுமையாகக் கேட்டு அறிந்து ஆய்வு செய்திட, 194 அரசுப் பணியாளர் சங்கங்களுடன் ஒன்பது சுற்றுகள் கூட்டங்களை நடத்தியுள்ளது.

மேலும், இந்திய ஆயுள் காப்பீட்டு கழகம் (LIC) மற்றும் சம்மந்தப்பட்ட நிதி நிறுவனங்களுடன் பல்வேறு கலந்தாய்வுக் கூட்டங்களையும் நடத்தியுள்ளது. துல்லியமான மற்றும் விரிவான ஆய்வுகளை மேற்கொள்வதற்கு உறுதுணையாக காப்பீட்டுக் கணிப்பாளர் மற்றும் நிதி வல்லுநர்களின் சேவையையும் குழு பயன்படுத்திக் கொண்டது.

கடந்த எட்டு மாதங்களில், 7.36 இலட்சம் பணியாளர்கள் மற்றும் 6.75 இலட்சம் குடும்ப ஓய்வூதியதாரர்கள் உட்பட ஓய்வூதியதாரர்களின் தரவுகளை சேகரித்தல், அவற்றில் இருந்த தவறுகளை நிவர்த்தி செய்தல் மற்றும் சரிபார்த்தல் உள்ளிட்ட பணிகளை ஓய்வூதியக் குழு விரிவாக மேற்கொண்டுள்ளது. கருவூலங்கள் மற்றும் கணக்குத் துறையின் மூலம் ஒருங்கிணைக்கப்பட்டு மேற்கொள்ளப்பட்ட இந்த விரிவான பணிகள், மாநில அரசின் ஓய்வூதிய பொறுப்புகளை மதிப்பீடு செய்வதற்கான உரிய தொழிநுட்ப வழிமுறைகளை வழிவகுக்க உதவியுள்ளன.

சேகரிக்கப்பட்ட புள்ளி விவரங்கள் மற்றும் தரவுகளின் எண்ணிக்கை அதிகம் என்பதாலும், ஒன்றிய அரசு, சம்மந்தப்பட்ட நிதி நிறுவனங்கள் மற்றும் இந்திய ஆயுள் காப்பீட்டு கழகம் ஆகியவற்றுடன் மேலும் கலந்தாய்வுகள் நடத்தவேண்டியிருப்பதாலும் குழு தனது பணியினை இறுதி செய்து அறிக்கையை அளிப்பதற்கு சற்று கூடுதல் அவகாசம் தேவைப்படுகிறது.

இச்சூழ்நிலையில், இக்குழுவானது நேற்று (30.09.2025) ஓய்வூதிய திட்டங்கள் குறித்த தனது இடைக்கால அறிக்கையினை அரசிற்கு சமர்ப்பித்துள்ளது. மேற்கூறிய கலந்தாய்வுகளை மேற்கொண்ட பின்னர், குழு தனது இறுதி அறிக்கையினை விரைவில் அரசிற்கு சமர்ப்பிக்கும்.



நெல்லை மேற்கு மாவட்டக் கழக அலுவலக கலைஞர் அரங்கில் மேற்கு மாவட்டக் கழகத்திற்கு உட்பட்ட அம்பாசமுத்திரம்,ஆலங்குளம் சட்டமன்ற தொகுதி வழக்கறிஞர் அணி சார்பில் சிறப்பு வாக்காளர் திருத்தம் (SIR)தொடர்பான ஆலோசனை கூட்டம் நெல்லை மேற்கு மாவட்டப் பொறுப்பாளர் இரா.ஆவுடையப்பன் தலைமையில் நடைபெற்றது.உடன் கழக சட்டத்துறை இணைச் செயலாளர் கே.எஸ். ரவிச்சந்திரன்,துணைச் செயலாளர் ராஜா முகமது, தொகுதி பார்வையாளர்கள் ஜோசப்ராஜ், கணேஷ்குமார் ஆதித்தன்,தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் ஆ.பிரபாகரன்,பிரபாகர பாண்டியன், மா.செல்லதுரை,துணை செயலாளர் மைக்கேல்,மாவட்ட வழக்கறிஞர் அணி அமைப்பாளர் செல்வ சூடாமணி உள்பட ஒன்றிய,நகர,பேரூர்,கழக நிர்வாகிகள்,கழக வழக்கறிஞர்கள் உள்ளனர்.